DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024
Prosecution Witness -P.W. 15

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர். பெஞ்சமின் ஜெபராஜ் |
| Father's Name | : | தேவராஜன் |
| Village | : | ஆசாரிபள்ளம் |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Caste | : | நாடார் |
| Calling | : | மருத்துவர் |
| Religion | : | கிறிஸ்தவர் |
| Age | : | 38 |
| Date | : | 20.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.06.2024.

(எதிரி ஆஜரில்லை. அவருக்காக கு.வி.மு.ச. 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

20.06.2024

முதல் விசாரணை :-

நான் தற்போது கன்னியாகுமரி அரசு மருத்துவகல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் போதகராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.08.2023 அன்று பணியிலிருந்த போது இறந்து போன 22 வயது மதிக்கதக்க மனோஜ் என்ற ஆண் பிரேதத்தை வடசேரி காவல் ஆய்வாளர் பிரேத பரிசோதனைக்கான விண்ணப்பத்தினை பெற்றேன். பிரேத பரிசோதனை பகல் 1.00 மணிக்கு ஆரம்பித்து 2.00 மணிக்கு முடித்தேன். பிரேத பரிசோதனையின் போது உடலில் காணப்பட்ட காயங்கள்.

1. வலது காது மடலில் 1 x 1 செ.மீ. அளவில் ஒரு துளைத்த காயம்.

2. தலையின் பின்புறம் வலது பக்கத்தில் வலது காதின் பின்புறம் 1 x 1/2 செ.மீ. சிராய்ப்புக் காயம்.

3. முன் கழுத்தின் கீழ் பகுதியில் 1 x 1/2 செ.மீ. சிராய்ப்புடன் கூடிய துளைத்த காயம். அதை பரிசோதித்த போது அது இடது புறமாக கீழ் நோக்கி சென்று இரத்த நாளங்களையும் இடது நுரையீரலின் மேல் பகுதியிலும் விலா எலும்பின் நான்கு மற்றும் ஐந்தாவது விலா எலும்புகளுக்கிடையேயும் துளைத்திருந்தது. இடது பக்க நெஞ்சு குழியில் 1 லிட்டர் ரத்தம் இருந்தது. இடது நுரையீரல் சுருங்கியிருந்தது.

4. வலது பக்க கழுத்தின் 1 x 1/2 செ.மீ. சிராய்ப்புடன் கூடிய துளைத்த காயம். அதன் அருகில் 3 x 1 செ.மீ. சிராய்ப்பு காயமும், அதன் வெளிப்பக்கத்தில் இருந்தது. அதை பரிசோதித்த போது அது 4 செ.மீ. ஆழம் சென்று கழுத்தின் ரத்த நாளங்களை துளைத்திருந்தது.

5. வலது பக்க மார்பின் வெளிப்புறத்தில் 6 x 1 செ.மீ. சிராய்ப்புக் காயம்.

6. வலது பக்க மார்பின் முன்புறம் 9 x 1/2 செ.மீ. சிராய்ப்புக் காயம்.

7. இடது பக்க மார்பின் கீழ் 4 x 1/2 செ.மீ. சிராய்ப்புக் காயம்.

8. மார்பின் நடுவில் 4 x 3 செ.மீ. சிராய்ப்புக் காயம்.

9. வலது கால் முட்டின் கீழ் 7 x 2 செ.மீ. சிராய்ப்புக் காயம்.

10. வலது கால் முட்டின் முன்புறம் 1/2 x 1/2 செ.மீ. சிராய்ப்புக் காயம்.

11. வலது தொடையின் கீழ் பாகத்தின் முன்புறம் 1 x 1/2 செ.மீ. சிராய்ப்புக் காயம்.

12. வலது பாதத்தின் உள்புறம் 4 x 3, 1 x 1/2, 1 x1 செ.மீ. மூன்று சிராய்ப்புக் காயங்கள்.

13. இடது கால் பெருவிரலில் 1 x 1 செ.மீ. தோல் அளவு ஆழமுள்ள சிதைந்த காயம்.

14. இடது கால் கீழ் பகுதியில் 5 x 2 செ.மீ. சிராய்ப்புக் காயம்.

15. இடது கால் கீழ் பகுதியில் 2 x1 செ.மீ. சிராய்ப்புக் காயம்.

16. தோள் பட்டை எலும்புகளின் நடுவில் 17 x 1 செ.மீ. சிராய்ப்புக் காயம்.

மேற்கூறிய காயங்கள் சிவந்து இருந்தன. வயிற்றில் 100 ML கூழ் போன்ற திரவம் புளித்த வாடையுடன் இருந்தது. மற்ற உடல் உறுப்புகள் சாதாரணமாகவும், வெளிறியும் காணப்பட்டன. உடல் உள்ளுறுப்புகள் இரசாயன பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்டது. இறந்த நபர் கழுத்தில் ஏற்பட்ட துளைத்த காயங்களினால் உண்டான அதிர்ச்சியினாலும், இரத்த சேதத்தினாலும் இறந்துள்ளார். அது குறித்து நான் பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கியுள்ளேன். இறுதியறிக்கை இரசாயன பரிசோதனை முடிவிற்காக நிறுத்தி வைக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்த பிரேத பரிசோதனை அறிக்கைதான். அது அ.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சேகரித்த உடல் உள்ளுறுப்புகளை திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி பெறப்பட்ட அறிக்கையில் எத்தில் ஆல்காஹால் எந்த விஷமும் இல்லை என்று கண்டறியப்பட்டிருந்தது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த இரசாயன பரிசோதனை அறிக்கை தான். அது அ.சா.ஆ. 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அறிக்கையின் பேரில் நான் இறந்த நபர் கழுத்தில் ஏற்பட்ட துளைத்த காயம் மற்றும் அதனால் ஏற்பட்ட உட்காயங்களினால் உண்டான அதிர்ச்சியனாலும், இரத்த சேதத்தினாலும் இறந்துள்ளார் என இறுதியறிக்கை அளித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் அளித்த இறுதியறிக்கைதான். அது அ.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 ஸ்கூரு டிரைவரினால் ஒரு நபரை குத்தினால் மேற்சொன்ன 1, 2 , 3 மற்றும் 4 காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அதேபோல அந்த ஸ்கூரு டிரைவரினால் ஒரு நபரை குத்தும்போது அது அவரை துளைக்காமல் உரசி சென்றால் காய எண்கள். 5, 6, 7, 8 மற்றும் 16 ஆகியவை ஏற்பட வாய்ப்புண்டு. காய எண்கள். 9 மற்றும் 10 அந்த நபர் கீழே விழும்போது ஏற்பட வாய்ப்புண்டு. ஒரு நபர் பைக்கில் இருபுறமும் உட்கார்ந்து கொண்டு

வரும்போது ரோட்டில் கால்கள் உரசினால் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் எனக்கு கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை தாக்கல் செய்கிறேன். அது அ.சா.ஆ. 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது சா.பொ. 1 ஸ்கூரு டிரைவரை காட்டி என்னை விசாரித்தாரா என்றால் இல்லை. அந்த காயங்கள் எப்படி ஏற்பட வாய்ப்புண்டு என்பது குறித்து காவல் ஆய்வாளர் என்னிடம் விசாரிக்கவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. காயம் எண். 3 ஒரு கம்பியை சாதாரணமாக 90 டிகிரி ஏங்கிளில் நேராக குத்தும்போது ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். குத்தும் நபர் மேலிருந்து கீழாக குத்தும்போது தான் காயம் எண். 3 ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரியல்ல. முன்னாலிருந்து குத்தியிருந்தால் கூட ஏற்பட வாய்ப்புண்டு. காய எண்கள். 1 முதல் 4 வரை ஒரு நபரை வேகமாக கட்டுமானத்தில் உள்ள கம்பிகளின் மீது 3 அல்லது 4 நபர்கள் தள்ளிவிடும்போது ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரியல்ல. காய எண்கள். 6 முதல் 8 வரை மார்பில் ஏற்பட்ட சிராய்ப்புக் காயங்கள் கரடு முரடான பாதையில் கீழே விழுந்தாலோ ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். ஒரு நபரை கரடு முரடான பாதையில் இழுத்தாலும், காய எண்கள். 9 முதல் 16 வரை ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். மேற்சொன்ன காயங்களினால் காயம் ஏற்பட்ட உடன் நிறைய இரத்தப் போக்கு ஏற்பட்டிருக்கும் என்றால் வெளியே அவ்வாறு நிறைய இருக்க வேண்டும் என அவசியம் இல்லை. உள்ளேயே நிறைய இரத்தம் போக்கு ஏற்பட்டு சேர்ந்திருந்தது. எனது பிரேத விசாரணை அறிக்கையில் முதுகில் நிறைய ரத்தம் வடிந்திருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. Hypostasis என்பது இறந்த நபரின் தோலுக்கு உட்புறம் தான் ஏற்படும் வெளிப்புறம் இரத்தம் வடியாது. நான் சொல்வது போல சா.பொ. 1 ஸ்கூரு டிரைவரினால் மேலே சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

நான் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதின் படி தவறுதலாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.